1972 ஆகஸ்ட் 25]

இளையான்குடி துணை வட்டம்

*342. வினா—திரு. வீ. மலைக்கண்ணன் : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

இராமநாதபுரம் மாவட்டத்தில் தற்போது தனி நிலை துணை வட்டமாக இயங்கி வரும் இளையான்குடியை வட்டமாக உயர்த்தும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் இளையான்குடி தனிநிலை துணை வட்டத்தை வட்டமாக உயர்த்துவதை குறித்து பரிசீலனை செய்து வருகிறார்.

திரு. த. சோணையா : தலைவர் அவர்களே, இளையாங்குடி வட்டம் ஒரு துணை வட்டமாக இருக்கிறது. அதைத் தனி வட்டமாக்கக் கோரி பல மகஜர்கள் அனுப்பப்பட்டுள்ளன. தனி வட்டமாக அதை ஆக்குவது பரிசீலனையில் இருப்பதாக என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், எப்பொழுது வரும் என்று காலம் குறித்துச் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : பரிசீலனை முடிந்த பிறகுதான் சொல்ல முடியும்.

திரு. கே. கே. முத்தையா : தலைவர் அவர்களே, துணை வட்டமாக இருப்பதைத் தனிவட்டமாக ஆக்கவேண்டுமானால் என்ன என்ன அடிப்படைத் தேவைகள் இருக்கவேண்டுமென்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தனிக்கேள்வி போட்டால் முழு விவரங்களும் சேகரித்துத் தரலாம்.

வீட்டு மனைகள் ஒப்படை

*343 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்தில் செம்மினிப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட பிள்ளையார்பாளையத்தில் வீடு கட்டிக் குடியிருக்கும் ஏழை மக்கள், அம்மனைகளுக்கான பட்டா கேட்டு விண்ணப்பித்துள்ளனரா ?

(இ) ஆம் எனில், பட்டா வழங்கப்படுவதில் தாமதமேற்படுவதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) ஆம்.

(இ) 1971-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 5 ஆம் நாள் ஒப்படை கேட்டு கொடுக்கப்பட்ட மனுவிற்கு, ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலத்தின் அண்டையில் உள்ள, ஆழ்வார்நாயக்கன் குளத்தின் ஆயக்கட்டு தார்கள் ஆட்சேபணை செய்ததால், மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏற்பட்டது. பின்னர் செம்மினிப்பட்டு பஞ்சாயத்து, ஒப்படை செய்வதற்கு சாதகமாக தீர்மானித்துள்ளதால், ஒப்படை செய்ய முறையாக மனுக்களைப்பெற்று, ஆக்கிரமிப்பு உள்ள பகுதியை உட்பிரிவு செய்து, ஒப்படை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

*344 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், மாகரல் மேட்டு அரிசன காலனியில் குடியிருப்போர்க்கு, வீட்டுமனைப் பட்டா வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சென்னை நகரிலும், சென்னை நகரின் எல்லையினின்றும் 20 மைல் சுற்றுப்புறத்தில் செங்கற்பட்டு மாவட்டத்திலும் உள்ள அரசாங்கத்துக்குச் சொந்தமான நிலங்கள் குடிசை மாற்று வாரியத்திற்குத் தேவைப் படலாம் என்ற காரணத்தால், மேற்கண்ட நிலங்களை எவருக்கும் ஒப்படை செய்யவோ அல்லது குத்தகைக்கு விடவோ கூடாது என்று அரசு உத்திரவிட்டுள்ளது. செங்கற்பட்டு மாவட்டம், திருவள்ளூர் வட்டம் மாகரல் மேட்டு கிராமம் மேற்கூறப்பட்டுள்ள தடைக்குட்பட்ட பகுதியான 20 மைல் எல்லைக்குள் உள்ளதால், அக்கிராம புல எண். 192-ல் உள்ள நிலம் அங்கு குடிசைகள் கட்டி ஆக்கிரமித்துள்ள அரிசனங்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்படவில்லை.

திரு. கா. வேழவேந்தன்: சென்னை நகரத்தின் எல்லையிலிருந்து 20 மைல் தூரம் வரை பட்டா கொடுக்க முடியாது என்றாலும் கூட, மாகரல் மேட்டு அரிசன காலனியில் பல வருஷங்களாகக் குடியிருந்து வருகிற அரிசன மக்களை ஜாதி இந்துக்கள் வெளியேற்ற வழக்குத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதைத் தனி கேஸாக எடுத்துக் கொண்டு அவர்களுக்குப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தடை இருப்பதைத் தெரிவித்தேன். யாரையோ வெளியேற்ற முயற்சிப்பதாகச் சொன்னார்கள். அந்த இடம் எல்லாம் குடிசை மாற்று வாரியத்திற்குத் தேவைப்படுவதால் பட்டா வழங்க உத்தேசம் இல்லை என்று தெரிவித்தேன். வேறு புகார் இருந்தால் போலீசார் அல்லது ரெவின்யூ அதிகாரிகள் உதவி கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

திரு. பா. நாகலிங்கம்: முண்டியம் நகரில் பர்மா அகதிகளுக்குப் பட்டா கொடுக்கப்பட்டது, ஆனால் பழங்குடி மக்களுக்குப் பட்டா வழங்கப் படவில்லை என்பதை அரசு அறியுமா ? அந்தப் பழங்குடி மக்களுக்கு உடனடியாகப் பட்டா கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?